

# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, திருப்பூர் மத்திய, திருப்பூர் கிழக்கு ஆகிய மாவட்டங்களிலும் திருப்பூர் தெற்கு மற்றும் திருப்பூர் வடக்கு மாநகரங்களிலும் காலியாக உள்ள இளைஞர் அணி மாவட்ட – மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு நிர்வாகிகள் நியமிக்கப்படுகின்றனர்.

இந்த மாவட்டம் மற்றும் மாநகரங்களில் ஏற்கனவே உள்ள இளைஞர் அணி நிர்வாகிகள், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகளுக்குத் தகுந்த ஒத்துழைப்பு வழங்கி, அவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட மாவட்ட–மாநகரங்களின் இளைஞர் அணி நிர்வாகிகள் விவரம் வருமாறு:

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

**அமைப்பாளர்:** சா.யுவராஜ், 22, உப்புப்பாளையம் மேற்கு, வெள்ளக் கோவில், காங்கேயம், திருப்பூர்.

**துணை அமைப்பாளர்கள்:** (1) த.ஆரோன் செல்வராஜ், 19/32, அலங்கியம் சாலை, தாராபுரம், திருப்பூர். (2) ந.வீரகாளி வெங்கடேஷ், 38, சோளக்கடை வீதி, தாராபுரம், திருப்பூர். (3) து.சக்திவடிவேல், 105/111, குப்பகவுண்டன் வலசு, ஆலம்பாடி, காங்கேயம், திருப்பூர். (4) சு.பத்மநாபன், 6/156, காளா தோட்டம், முத்தூர், பெரியகுமாரபாளையம், தாராபுரம், திருப்பூர். (5) மணிவாசகம், 11/62, கிழக்குத் தெரு, தளவாய்ப்பட்டினம், தாராபுரம், திருப்பூர். (6) சு.பாலகிருஷ்ணன், 6/46, கணிக்கம்பட்டி, தாராபுரம், திருப்பூர். (7) கே.எஸ்.அர்ஷத் உசேன், 84-ஏ, முஸ்லிம் வீதி, காங்கேயம், திருப்பூர். (8) ரா.ராஜராஜன், 171/9, கே.பி.எஸ். நகர், தாராபுரம், திருப்பூர்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

**அமைப்பாளர் :** மு.ஜெயக்குமார் எம்.எல்.ஏ., டபிள்யூ– 5/257, மலையப்ப கவுண்டர் லே–அவுட், காந்தி நகர், உடுமலைப்பேட்டை, திருப்பூர்.

**துணை அமைப்பாளர்கள்:** (1) சா.கவியரசு, 3/19, குருவப்பநாயக்கனூர், மானுப்பட்டி, உடுமலைப்பேட்டை, திருப்பூர். (2) த.கௌதம்ராஜ், 10/90, பனத்தம்பட்டி, மெட்ராத்தி, மடத்துக்குளம், திருப்பூர். (3) மு.விஷ்ணு கார்த்திகேயன், 3/125, சுங்காரமடக்கு, பெதப்பம்பட்டி, உடுமலைப்பேட்டை. (4)க.கார்த்திக்ராஜா, 5/87, அய்யர்தோட்டம், பூலவாடி, உடுமலைப்பேட்டை, திருப்பூர். (5) ப.கோபாலகிருஷ்ணன், 2/18, சிராகள்பாவி, எஸ்.கே.பாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர். (6) சு.சம்பத்குமார், 2/21–ஏ–1, அண்ணா நகர், சீலக்காம்பட்டி, பொள்ளாச்சி. (7) அ.ராம்மோகன், 2/123, மரம்புடுங்கி கவுண்டன்புதூர், எரிபட்டி, பொள்ளாச்சி, கோவை. (8) அ.சமீர், 5/12, கந்தசாமிபுரம், உடுமலை சாலை, பொள்ளாச்சி. (9) மா.சுபாஷ், 1/52–ஏ, அண்ணா நகர், எலையமுத்தூர், உடுமலைப்பேட்டை.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

**அமைப்பாளர் :** செ.ரமேஷ், 431/179–பி, புதுமலையாங்காடு, சென்னிமலைக்கவுண்டன்புதூர், செம்பியநல்லூர், வேலாயுதம்பாளையம், அவிநாசி.

**துணை அமைப்பாளர்கள்:** (1) எஸ்.ஆர்.முத்துக்குமார், 4/8–51–ஏ, வீரமாருதி தெரு, அனுப்பம்பாளையம், திருப்பூர். (2) உ.லிங்கேஸ்வரன், 7/1, சன்னதி வீதி, திருமுருகன்பூண்டி, அவிநாசி, திருப்பூர். (3) பி.கே.அருணாச்சலம், 469–ஏ, பட்டக்காரன்புதூர், அன்னூர் மேட்டுப்பாளையம், அன்னூர், கோவை. (4) சேவூர் ப.ரவிச்சந்திரன், 6/5, ஈஸ்வரன் கோயில் வீதி, சேவூர், அவிநாசி, திருப்பூர். (5) ச.பாண்டித்துரை, 1/156–1, முல்லை நகர், கணியாம்பூண்டி, வஞ்சிபாளையம், அவிநாசி, திருப்பூர். (6) ஆ.கோவிந்தராஜ், 9/116, அருகம்பாளையம், குன்னத்தூர் புதூர், ச.சா.குளம் (வழி), கோவை. (7) க.மாதேஸ்வரன், 17, முட்டியங்கிணறு, பெருமாநல்லூர் ஈட்டி, வீரம்பாளையம், திருப்பூர்.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

**அமைப்பாளர் :** எம்.எஸ்.ஆர்.ராஜு (எ) மணிகண்ட பிரபு, 1/55, சூரியா நகர், கரைத்தோட்டம், கருவம்பாளையம், திருப்பூர்.

**துணை அமைப்பாளர்கள்:** (1) ஷா.அப்துல் ரஹீம், 1–ஈ, 371, கணபதிபாளையம் சாலை, ஆர்.பி. நகர், மங்களம், திருப்பூர். (2) செ.ராஜசேகரன், 1/1264, மூலத்தோட்டம், கல்லம்பாளையம், நாராயணபுரம், பல்லடம், திருப்பூர். (3) ஈ.பாலசுப்பிரமணியம், 10/62, குன்னாங்கல்பாளையம், வீரபாண்டி, திருப்பூர். (4) த.சசிகுமார் (எ) ஞானசிகாமணி, 1/383, அம்பேத்கர் நகர், வெள்ளக்கரடு சிட்கோ, முதலிபாளையம், திருப்பூர். (5) மு.முகமது ஜுனைத், 2/298, ரம்யா கார்டன், 4–வது வீதி, பல்லடம் சாலை, உயர்நிலைப் பள்ளி பின்புறம், மங்களம், திருப்பூர். (6) த.சசிகுமார், 17, டி.பி.ஏ. குடியிருப்பு, என்.ஆர்.கே.புரம் பிரதான சாலை, திருப்பூர். (7) நா.தியாகு, 7/34, கணபதிபாளையம், ராக்கியாபாளையம், விஜயபுரம் நல்லூர், திருப்பூர். (8) ர.தமிழரசு, 1/225, குளத்துப்புதூர், ஆண்டிப்பாளையம், மங்களம் சாலை, திருப்பூர்.

### திருப்பூர் வடக்கு மாநகரம்

**அமைப்பாளர்:** அ.பார்த்திபன், 207, மாரியம்மன் கோயில் வீதி, ஆத்துவழித்தோட்டம், அனுப்பர்பாளையம், திருப்பூர்.

**துணை அமைப்பாளர்கள்:** (1) த.சந்திரசேகர், 25/27, நீலகண்டபுரம், மத்திய வீதி, திருப்பூர். (2) ஆ.வஞ்சிமுத்து, 2/184, தந்தை பெரியார் நகர், பூண்டி ரிங் ரோடு, செட்டிப்பாளையம், திருப்பூர். (3) திராவிடபாலு (எ) வி.பாலசுப்பிரமணி, 2/31, மாரியம்மன் கோயில் முதல் வீதி, பிச்சம்பாளையம், திருப்பூர். (4) செ.ராம்குமார், அங்கேரிபாளையம், மஹா விஷ்ணு நகர், திருப்பூர். (5) ர.சிவகுமார், மஹா விஷ்ணு சூப்பர் மார்க்கெட், எம்.எஸ்.நகர், கொங்கு பிரதான சாலை, திருப்பூர். (6) ப.அசோக், 7, தியாகி பழனிச்சாமி நகர், காந்தி நகர், திருப்பூர். (7) எஸ்.எஸ்.ராஜு, 4/672, தத்துவஞானி நகர், வாவிபாளையம், திருப்பூர்.

### திருப்பூர் தெற்கு மாநகரம்

**அமைப்பாளர் :** ம.அசோக்குமார், 345/63–ஏ, செரங்காடு முதல் வீதி, கே.என்.பி. சுப்பிரமணி நகர், சிவசக்தி மாரியம்மன் கோயில் அருகில், நல்லூர், திருப்பூர்.

**துணை அமைப்பாளர்கள்:** (1) பெ.திவாகரன், 69/160, சூசையாபுரம் மேற்கு, திருப்பூர். (2) மு.விக்னேஷ்குமார், 76/1, காமாட்சி அம்மன் நகர், மணிகாரம்பாளையம் பிரதான சாலை, திருப்பூர். (3) க.சையது அபுதாஹிர், 114/6, பூலவாரி சுகுமார் நகர் மேற்கு, காங்கேயம் சாலை திருப்பூர். (4) கு.அரவிந்த், 8, சூசையாபுரம் 4–வது வீதி, ராயபுரம், திருப்பூர். (5) மு.ஜீவா, 21, கிருஷ்ணா நகர் 2–வது வீதி, காவேரி மெடிக்கல் அருகில், காந்தி நகர், திருப்பூர்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 17.09.2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# பிரதமர் நரேந்திர மோடி பிறந்த நாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, செப். 18 –
பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பிறந்த நாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நீண்ட ஆயுளோடு நல்ல உடல் நலத்துடனும் மகிழ்ச்சியோடும் இருக்க வாழ்த்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# நாமக்கல்லில் பேறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## சிலைக்கு ராஜேஸ்குமார் எம்.பி. – முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் மாலை அணிவித்து மரியாதை!

*நாமக்கல், செப். 18 –
தமிழ் சமூகத்திற்கு தனது அரசியல் சிந்தனைகள் மூலம் அறிவொளி ஏற்றிய தென்னாட்டு பெர்னாட்ஷா என போற்றப்படும் பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த நாளை முன்னிட்டு, நாமக்கல்லில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.*

*நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான ராஜேஸ்குமார், முன்னாள் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், மாவட்ட அவைத்தலைவர் சி. மணிமாறன், மாநகராட்சி மேயர் து. கலாநிதி, நகரக் கழகச் செயலாளர்கள் செ.பூபதி (துணை மேயர்), ராணா ஆனந்த், சிவக் குமார், ஒன்றியச் செயலாளர் பழனிவேல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

*மேலும், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.*

# யு.பி.ஐ. கட்டணத்தை ரத்து செய்யவும்!

## உச்ச நீதிமன்றத்தில் மனு!

*புதுடெல்லி, செப். 18 –
மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட, ரூ.2,000க்கு மேற்பட்ட வணிகரீதியான யு.பி.ஐ. பரிவர்த்தனைகளுக்கான கட்டண அறிவிப்பை ரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*வழக்கறிஞர் அஞ்சன் தத்தா தாக்கல் செய்துள்ள மனுவில், “புதிய யுபிஐ கட்டணங்களால் வணிகர்கள் இந்தக் கூடுதல் செலவை நுகர்வோர் மீது சுமத்துவர். எனவே இது சாமானிய மக்களைப் பாதிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*எனவே, யு.பி.ஐ. பணப் பரிவர்த்தனைகளுக்குக் கட்டணம் விதிக்கும் புதிய நடைமுறையை ரத்து செய்ய வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளார்.*

*இந்த மனு உச்ச நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

# இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



*இராமநாதபுரம், செப். 18 –
இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று (18.09.2026 வெள்ளிக்கிழமை) காலை 11.15 மணி இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் மகளிர் அணி மாநில செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன் Ex.MP , தூத்துக்குடி வணக்கத்திற்குரிய மேயர் ஜெகன் பெரியசாமி கலந்து கொள்ள இருக்கிறார்கள். ஆகவே இக்கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள் கிறேன்.*

*1. அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து*

*2. கழக ஆக்கப் பணிகள்.*

*இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், காதர் பாட்சா முத்து ராமலிங்கம் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.*

## அதிகாரத்தைப் பயன்படுத்தி அச்சுறுத்துவதாலும் – அடக்கு முறைகளாலும்

# தி.மு.கழகத்தின் குரலை ஒருபோதும் ஒடுக்கிவிட முடியாது!

## அன்பில் மகேஸ் பொய்யாமொழி இல்லத்தில் ரெய்டு: கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!



சென்னை, செப். 18 –
சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், புதிய தலைமைச் செயலகத்திற்காக பட்டினப்பாக்கம் மக்களை அப்புறப்படுத்தும் முயற்சி என, த.வெ.க. அரசின் அராஜகங்களை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். அதோடு, முதலீடுகளை ஈர்க்கச் சென்ற வெளிநாட்டுப் பயணத்தின் உண்மை நிலையும் வெளிச்சத்துக்கு வந்துள்ள நிலையில், வழக்கம்போல மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக, நேற்று முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் இல்லத்தில் சோதனை நடத்தப்பட்டிருக்கிறது.

அதிகாரத்தைப் பயன்படுத்தி அச்சுறுத்துவதாலும், அடக்குமுறைகளாலும் தி.மு.கழகத்தின் குரலை ஒரு போதும் ஒடுக்கிவிட முடியாது. இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு எல்லாம் தி.மு.கழகம் ஒருபோதும் அடிபணியாது என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் பணிகள் சம்பந்தமாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட அவைத்ததலைவர் சி.நரசிம்மன், ஒன்றிய கழக, பகுதி கழக செயலாளர்கள் கலந்துகொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் அம்மூர் பேரூர் சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றனர். இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டார்கள்.